ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1698/8 - 2011 මාර්තු 22 වැනි අඟහරුවාදා - 2011.03.22

*1698/8 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*பணிப்புரை இல. 35.*

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

10 (i) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 10 (i) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்பட்டு, அதன்படி கீழ்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்களின் தயாரிப்பாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் அதிகாரசபையானது, பொருட்களின் மீது அல்லது அதன் பொதியின் மீது அல்லது கொள்கலனின் மீது அல்லது அதன் உறையின் மீது -

(அ) உயர்ந்த பட்ச சில்லறை விலை
(ஆ) தொகுதி இலக்கம்
(இ) காலாவதியாகும் திகதி
(ஈ) உற்பத்தித் திகதி
(உ) நிகர நிறை/அளவு

என்பனவற்றை குறிப்பிடுமாறு இத்தால் பணிப்புரை விடுகின்றது.

**அட்டவணை**

1. ஹெயார் ஓயில், ஹெயார் ஜெல், ஹெயார் கிறீம், சம்பூ, லோசன் மற்றும் முகப்பவுடர்.
2. பொதி செய்யப்பட்டு அல்லது கொள்கலன்களில் விற்கப்படும் பேரீச்சம்பழம், பிளம்ஸ் என்பன.
3. பொதி செய்யப்பட்டு அல்லது கொள்கலன்களில் விற்கப்படும் உணவுக்காக பயன்படுத்தப்படும் நிற சாயங்கள், உணவு சுவையூட்டும் பொருட்கள், உணவுக்கான நறுமணப் பொருட்கள்.
4. பொதி செய்யப்பட்டு அல்லது கொள்கலன்களில் விற்கப்படும் துரித தயாரிப்பு ஆகாரங்கள்.
5. பொதிகளில் விற்பனை செய்யப்படும் பாத்திரங்களைச் சுத்தப்படுத்தும் கட்டி வகைகள்.
6. கொள்கலன்களில் விற்பனை செய்யப்படும் வாகன சுத்திகரிப்பு பொருட்கள் மற்றும் வாகன கண்ணாடிகளை கழுவும் பொருட்கள் என்பன.
7. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் விற்பனை செய்யப்படும் ஆயுள் வேத உற்பத்திப் பொருட்கள்.

இப்பணிப்புரை 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் அமுலுக்குவரும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2011, மாச்சு 16.

4- 240

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.